**செய்தி வெளியீடு எண்: 513** **நாள்: 12.08.2011**

## இந்து சமய அறநிலையத் துறை

## சிறப்பு வழிபாடும் பொது விருந்தும்

ஆண்டுதோறும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் அனைத்து சமுதாய மக்களும் பங்கு பெறும் வகையில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்படுகிறது. இவ்வாண்டு மாநிலத்தில் **370** திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து **15.8.2011** திங்கட்கிழமை அன்று சிறப்புடன் நடைபெறவுள்ளது.

சென்னையில் மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் **33** திருக்கோயில்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மாநிலத்தின் பிற இடங்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடைபெறும் திருக்கோயில்களில் மாவட்ட ஆட்சியர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்திய சுதந்திரத் திருநாளை ஒட்டி நடைபெறும் இச்சிறப்புமிகு சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியை அனைத்து சமுதாய மக்களும் பங்கு பெற்று சிறப்பிக்க வேண்டப்படுகிறது.

இணைப்பு மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும்
அமைச்சர் பெருமக்கள் கலந்துக் கொள்ளும்
பட்டியல்